REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 4உ வெள்ளி (19—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 5உ சனி (20—11—54) [இதழ் 136

## எல்லோரும் தோற்றனர்

பூனு, நவ. 19—

பூனு பல்கலைக் கழகம் அக்டோபரில் நடத்திய எம்.,டி., எம்.எஸ். (மருத்துவத் துறை உயர் படிப்பு) பரிட்சை எழுதிய எல்லா மாணவர்களுமே தோற்றுவிட்டனர் என்றும், ஒருவர்கூட தேறவில்லையென்றும் பல்கலைக்கழக அதிகாரி கூறியிருக்கிறார்.

# காங்கிரஸ் முக்கியஸ்தர்களின் 'கிருஷ்ணலீலா'!

## தானியக் கிடங்குகள் - தீயிடப்பட்டன!

### ஆந்திரர்-ஒரியர் கலவரம் பரவுகிறது

### பெர்ஹாம்பூரில் ஊரடங்குச் சட்டம்

கர்னூல், நவ. 18—

ஆந்திரர்களுக்கும்—ஒரியர்களுக்கும் இடையே பகை வளர்ந்து வருகிறதாம். ஸ்ரீகாகுளத்தில் ஒரியர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்போது பெர்ஹாம்பூரில் உள்ள ஆந்திரர்களின் தானியக் கிடங்கு ஒன்றுக்கு தீயிடப்பட்டதாகத் தெரிகிறது.

பர்லாகிமிடியில் மட்டும் நிலவிய ஆந்திர—ஒரியர் பகை, இப்போது பெர்ஹாம்பூருக்கும் பரவியுள்ளதாம். நிலைமைகளை ஆந்திர சர்க்கார் கூர்ந்து கவனித்து வருகிறதாம்.

கட்டாக்கிலிருந்து கிடைத்துள்ள செய்திகளின்படி, பெர்ஹாம்பூரில் 12 மணி நேரம் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாம்.

நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு கலவரங்கள் நடைபெற்றதை ஒட்டியே இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானில் ஜாகீர்கள் ஒழியும்!

பாகிஸ்தானில் இன்றுள்ள ஜாகீர்தார் முறையை ஒழிப்பதற்கான திட்டங்களை, அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

நாட்டில் உள்ள எல்லா மாநிலங்களிலும், நில உடைமை முறையில் ஒற்றுமை ஏற்படுத்தும் பொருட்டு பாகிஸ்தான் திட்டக் குழு நிலச் சீர்திருத்தத்திற்கென்றே ஒரு தனிப் பிரிவைக் கொண்டிப்பதாகவும் தெரியவருகிறது.

## கொள்ளைக் கூட்டத் தலைவன் மான்சிங்குடன் கள்ள நட்பு

### மத்திய பாரத் காங்கிரஸ் பெரும் புள்ளிகளின் குட்டு அம்பலம்

### போலீசிடம் சிக்கிய தெசில்தார் சிங் தரும் தகவல்

குவாலியரில் தெசில்தார் சிங் என்ற கொள்ளைக்காரனைப் போலீசார் கைது செய்துள்ளனர். அந்தக் கொள்ளைக்காரன் தந்துள்ள தகவலின்படி, கொள்ளைக்கூட்டத்திற்கும் மத்திய பாரத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்களுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிகிறது.

'டொவா' என்ற இடத்தில், தெசில்தார் சிங்கிடம் போலீசார் வாங்கியுள்ள வாக்குமூலத்தில், "கொள்ளைக்கூட்டத் தலைவனான மான்சிங் என்பவனைப் பிடிக்க வேண்டுமானால், சில காங்கிரஸ்காரர்களின் உதவி தேவை" என்று கூறியுள்ளதாகப் போலீசார் தெரிவிக்கின்றனர்.

மைந்து, மொரேனா ஆகிய மாவட்டங்களில் கொள்ளைக் கூட்டத்திற்கு எதிராகப் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை, சில காங்கிரஸ்காரர்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதின் நோக்கத்திலும் சந்தேகப்படுவதற்கு இந்தக் கொள்ளைக்காரன் வாக்குமூலம் இடமளிக்கிறது என்றும் போலீசார் கருதுகின்றனர்.

ஒரு பெரும் பணக்காரனைக் கடத்திச் சென்று, அவன் மீள வேண்டுமானால் ஏராளமான பணம் தரவேண்டுமென கொள்ளைக் கூட்டத் தலைவன் மான்சிங் பெற்ற பெருந்தொகை கூட சில அரசியல் காரியங்களுக்குப் பயன்

(4-ம் பக்கம் பார்க்க)

## உழவர்கள் மாநாட்டில் மாணவர்கள் கலகம்

### அழைப்பை ஏற்காத அமைச்சர் மீது கோபம்

பத்ரௌனு, நவ. 17—

உத்திரப் பிரதேசத்தில், அகில இந்திய பண்ணைத் தொழிலாளர் சங்க மாநாட்டில், நகர கல்லூரி ஒன்றைச் சேர்ந்த 100 மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று தெரிகிறது.

இந்த மாநாட்டைத் துவங்கி வைக்க இருந்த சம்பூர்ணானந்த் அவர்களை, தங்கள் கல்லூரியின் விஞ்ஞானக் கழகத்தைத் திறந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## அண்ணாமலை நகரில் கருணாநிதி

சிதம்பரம் புகைவண்டி நிலையத்தில் 14—11—54 ஞாயிறு மாலை 3-30 மணி வண்டியில் வந்திறங்கிய தோழர்கள் இரெ. இளம்வழுதி, கருணாநிதி ஆகிய இருவரையும், தோழர்கள் தில்லை-வில்லாளன், க. அறிவழகன், நாஞ்சில் கண்ணப்பா, வளவன் மற்றும் ஏராளமான மாணவத் தோழர்களும் கூடி வரவேற்றார்கள்.

பின்னர் கழகத்தின் ஆக்கவேலைகளைக் குறித்து சுமார் 1 மணி நேரம் தோழர்கள் கருணாநிதியும், இளம்வழுதியும் மாணவத் தோழர்களிடம் பேசிக்கொண்டிருந்தனர்.

அன்று மாலை $5\frac{1}{2}$ மணியளவில் தி. மா. மு. கழகக் கூட்டம் ஆரம்பமாகியது. தோழர் ஒளியழகன் வழக்கறிஞர் இளம்வழுதி அவர்

(4-ம் பக்கம் பார்க்க.)

## மதுவிநியோகம் பற்றிய - பிரகாசத்தின் இறுதி உத்திரவு

### ரத்து செய்யப்பட்டுவிட்டது?

சென்னை நவ. 18—

இராமமூர்த்திக் குழுவினரின், 'மருத்துவர் அத்தாட்சிச் சீட்டில்லாமலேயே அன்னியச் சாராயங்களை உபயோகிக்கலாம்,' என்ற ஒரு சிபாரிசுக்கிணங்க, பிரகாசம் மந்திரி சபை, தனது கடைசிக் கூட்டத்தில், 'மருத்துவர் சீட்டில்லாமலேயே ஆண்டொன்றுக்கு ரூ. 150 'லைசென்ஸ்' கட்டணம் செலுத்தினால், யாரும் அன்னியச் சாராயம் உபயோகிக்கலாம்,' என்று முடிவு செய்திருந்தது.

ஆனால், தற்போது அந்த முடிவு அமுல் செய்யப்படமாட்டாது எனத் தெரிய வருகிறது. காரணம், 'இது ஒரு கொள்கை விஷயம் ஆதலால், பழைய மந்திரி சபை செய்த ஏற்பாட்டை ஏற்பதற்கில்லை யெனவும், எனவே, புதிய மந்திரி சபை அமைக்கப்படும் வரையில், பிரகாசம் மந்திரி சபையின் இந்த முடிவை அமுல் நடத்துவதற்கில்லை' எனவும், ஆந்திர சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாராம்.

## வெள்ள நிவாரண நிதி திரட்டித் தருவதாக ஏமாற்றியவர் கைது!

### மந்திரியை மயக்கிய மாயக்காரன்

வி. ராமண்ணராவ் என்ற ஒருவர் தன்னை ஒரு சினிமா எழுத்தாளர்—படத்தயாரிப்பாளர் எனக் கூறிக்கொண்டு வெள்ள நிவாரணத்திற்கு பணம் திரட்டித் தருவதாகக் கூறி ஏமாற்றியதாக ஐதராபாத்போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என அறியக்கிடக்கிறது.

அவர் ஒரு மந்திரியிடம் சென்று தன்னைப் பற்றி மேற்கண்டவாறு கூறி, தென்னிந்திய சினிமா நடிகர்களைக் கொண்டு ஒரு விழா நடத்தி வெள்ள நிவாரணத்திற்காகப் பணம் திரட்டித் தருவதாகக் கூறினாராம்.

அந்த விழா நடைபெற வேண்டிய தியேட்டரில், சினிமா நடிகர்கள் வராமையினால் விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு மட்டும் காணப்பட்டதாம்.

விழாவிற்காக ஏராளமான டிக்கட்டுகள் நூற்றுக்கணக்கான ரூபாய்க்கு விற்கப்பட்டிருந்ததாம்.

## சர்க்கார் அலுவலகத்தின் முன் அகதிகள் ஆர்ப்பாட்டம்!

கல்கத்தா, நவ. 18—

கல்கத்தாவிலுள்ள குடியேற்ற இலாகாவின் கிளைக் காரியாலயம் ஒன்றின் முன்பு, அகதிகள் ஆர்ப்பாட்டக்காரர்கள், தங்களை மேற்கு வங்கத்திலேயே குடியேற்றவேண்டுமென்று கோஷித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு, காரியாலயத்தின் முன்பு உட்கார்ந்து கொண்டு, அதிகாரிகளைக் காரியாலயத்திற்குள் நுழையவிடாமல் தடுத்தார்கள். காரியாலய கட்டிடத்தின் மீது கற்களையும் வீசி எறிந்தார்களாம். இவர்களை அடக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததின் விளைவாக போலீசார் உட்பட 12 பேர் காயமுற்றதாகவும், போலீசார், 4 பெண்கள் உட்பட 25 பேர்களைக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

## ரூ. 40,000 களவாடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்

### 3 வருட சிறை தண்டனை பெற்றனர்!

லக்னோ, நவ. 13—

மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறும் உயர்தர அதிகாரி உட்பட நான்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் பணத்தை கையாடியதாக குற்றம் சாட்டப்பட்டு, ஒரு வருடம் முதல் மூன்று வருடம்வரை சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் மாநில சர்க்காரின் கூட்டுறவு இலாகா நடத்தும் மாநில கூட்டுறவுக் கழகமொன்றுக்குரிய ரூ. 40,000-த்தைக் கையாடினராம்.

## ராஜா சர் முத்தையா கட்டும் கோவிலில் மூவர் பலி!

### நால்வர் உயிர் ஊசலாடுகிறது

பேராவூரணி, நவ. 17—

பேராவூரணிக்கு தென் கிழக்கேயுள்ள அடைக்கத்தேவன் கிராமத்தில் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் அம்மன் கோவில் கோபுரத்துக்குக் கருங்கல் ஏற்றும்பொழுது, உச்சியில் இருந்து கல் விழுந்து, மூவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். நால்வர், கை, கால் ஒடிந்து படுகாயமுற்றனர்.

மேற்படி கோவில், தம்மிடம் வேலை பார்த்த பார்ப்பனர் ஒருவருக்குக் கட்டித்தருவதாகக் காலஞ் சென்ற ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவர்தம் குமாரர் முத்தையா செட்டியாரால் நிறைவேற்றி வைப்பதாகும்.

## தென்னிந்திய மீனவர் - குறைகளைக் களைய....

### டெல்லி அதிகாரிகளிடம் கோரிக்கை

"வர்த்தகக் கப்பல்களில் பணிபுரிய பொறுக்கப்படும் தென்னிந்திய மாணவர்களுக்குக் கட்டாயமாக இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதிக்கக்கூடாது; மீனவர்களையும், 'ஷெட்யூல்டு வகுப்பினர்' பட்டியில் சேர்த்து, பிற்பட்ட மக்களுக்குக் காட்டப்படும் சலுகைகளை அவர்களுக்கும் அளிக்க வேண்டும்."

இவ்வாறு, சென்னை மாநில மீனவர் சங்கத்தின் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம், இரயில்வே துணை மந்திரி அழகேசன் அவர்களை நேரில் கண்டு வலியுறுத்தியுள்ளார். [4-ம் பக்கம் பார்க்க]

## ஆசைப்படுகின்றனர்!

இந்தோனேஷியா மந்திரி சபையில் தங்களுக்கும் இடம் வேண்டும் என்று கேட்பதென கம்யூனிஸ்டு கட்சியினர் முடிவெடுத்துள்ளனர்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 19—11—1954 வெள்ளி

# கண்ணனும் இல்லை— குசேலர்களும் இல்லை!

பதினன்கு வயதுக்குட்பட்டச் சிறுர்கள்—பள்ளி செல்ல, கல்வி பயில, வருங்காலத்தில் வகையுடன் வாழ்வதற்கேற்ப வளைக்கப்பட வேண்டிய பருவத்தினர்—பணி பலவற்றில் ஈடுபடுத்தப்பட்டு, அவர்தம் உடலுழைப்பு உறிஞ்சப்படும் கொடுமை இந்த 'பாரத புண்ணிய பூமி'யில் மலிந்துகிடக்கிறது.

பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் வேலையிலீடுபடுத்தப்படக்கூடாது என்ற சட்டம் 'மதிக்க'ப்படாமல், பலரால் துணிவுடன் மீறப்படுகிற நிலை நீடிக்கிறது என்ற இந்தியப் பேரரசின் அறிக்கையில் காணும் விபரம் இதைத் தெளிவுபடுத்துகின்றது.

இந்தியத் துணைக் கண்டம் முழுதும், வளரும் பருவத்தினரை வதைக்கும் இந்தக் கொடுமை இருந்தாலும்கூட, தென்னிந்தியாவில்தான்- குறிப்பாக சென்னை, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில் தான்—இக்கொடுமை தெள்ளத் தெரிகிறது எனவும் அப்பேரரசின் அறிக்கை கூறுகிறது.

சென்னையில் உள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும், பீடி உற்பத்திக்கூடங்களிலும், திரு—கொச்சியில் உள்ள முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளிலும் பதினன்கு வயதுக்குட்பட்டச் சிறுர்களை வேலைக்கமர்த்தும் வேதனை பரவலாகக் காட்சித் தருகிறதாம்.

சர்க்கார், அறிக்கை மூலம் பிரலாபித்துக் கொள்கிறது—"கொடுமை நீடிக்கிறது; சட்டம் மதிக்கப்படுவதில்லை; மீறுபவர்களைக் கண்டு பிடிப்பதில் அதிகக் கருத்துச் செலுத்த வேண்டும்; அதிகாரிகள் போதவில்லை; குற்றம் புரிவோரைக் கூண்டிலேற்ற, கொடுமை புரிந்தமைக்குத் தண்டனை தர முயற்சிகள் தீவிரமாக்கப்பட இருக்கின்றன" — என்றெல்லாம்!

சட்டங்களை உருவாக்கி, அவற்றை மீறுபவர்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுவது மட்டுமே இப்பிரச்சினைக்குப் பரிகாரமாகிவிட முடியுமா?

தென்னட்டவரின் இன்றைய நிலை என்ன?

வாழ்வு, அவர்களுக்குக் கிடைக்காத ஒன்று—அதன் முழுப் பொருளுடன்!

'வாழ்கிறோம்,' என்ற பெயரில், நடைப்பிணங்களாய் உலவுவோர் ஏராளம்!

சிலர் உழைக்கிறார்கள்—ஊன்உருக, குருதி சுண்ட—என்றாலும், கிடைக்கும் ஊதியம், ஒருவேளை உண்ணவே போதுவதில்லை!

இன்னும் பலர் உழைக்கச் சித்தமாயிருக்கின்றனர்—ஆனால், வாய்ப்பில்லை. வேலை இல்லை என்ற வேதனை தொடருகிறது. அந்தவேதனையோ, 'பசி, பட்டினி' என்ற இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயாகி, அவற்றைத் 'தாலாட்டி'த் துன்புற வேண்டிய 'தந்தை'யின் நிலைக்கு அவர்களைத் துரத்துகிறது.

வாழ முடியாதவராகி விடுபவரில் பலர், எஞ்சுகிற மானத்தை விற்கின்றனர். அதை, 'பெரிதென்றெண்ணும் பரம்பரையினர் நாம்,' என்ற உணர்வு பெற்றவர், 'சாவே! நீயே என் துன்பத்தைத் துடைக்கும் அருமருந்து,' எனக் கூறி, ஆடும் மரக்கிளையை, ஓடும் மாநதி வெள்ளத்தை, உயிரை மாய்த்துக் கொள்ளும் அரிய சாதனங்களாக்கிக் கொள்கின்றனர்.

இப்படி ஒரு நாட்டு மக்கள், கொடுமையிலும் கொடுமைகள் பலவற்றின் கோரப் பிடிக்கு இலக்காகித் தவிக்கின்றனர்.

வறுமை தரும் வாட்டம் பலருக்கு! 'பொறுத்திருப்போம்; புது வாழ்வு கிடைக்கும்' என்ற தங்கள் பொறுமை தரும் ஏமாற்றம் இன்னும் பலருக்கு! வேறு பலருக்கோ, 'வாழ்வே மாயம்' என்ற பரம்பரை பாழ் தத்துவம் தந்துதவும் மனச் சாந்தி! 'உழைக்கிறோம், உடல் தேய; என்றாலும், வாழ முடியவில்லை—கிடைக்கும் பலன் கொண்டு,' —என்ற ஏக்கம் இன்னும் பலருக்கு!

பொதுவில், மக்கள் வாழவில்லை; அவர்களுக்கு வாழ்வு தரப்படவில்லை.

இது இன்றைய நிலை!

இந்த நிலையில், '14 வயதுக்குட்பட்டவர்களை வேலையிலமர்த்திக்கொள்ளக் கூடாது,' என ஒரு சட்டம்!

14 வயதுக்குட்பட்ட பாலகர்கள், வளரும் தங்கள் உடலை தேய்த்துக்கொள்ளும் வகையில் உழைப்பைச் செலவிடக் கூடாது என்பது உண்மைதான். ஒப்புக் கொள்வர், மனிதாபிமான மனம் கொண்டோர்!

ஆனல்................

பெற்றெடுத்த பிள்ளையைக் காட்டி, அதன் வாட்டத்தை சாட்சிக் கழைத்து, 'என் நிலை பாரீர்; பசியால் துடிக்கும் என் செல்வனைக் காணீர்; பசி போக்க, காலணுக் காசு தாரீர்!' என ஓலமிடும் மக்கள் நிரம்பிய ஒரு சமுதாயம், எப்படி, 'பதினன்கு வயதுச் சிறுவனை வேலைக்கனுப்பக் கூடாது; அவன் வளர வேண்டியவன்; உழைத்தால் வளர்ச்சி குன்றும்; அவனது வருங்காலம் மங்கும்' என்ற உயர் உணர்வு பெற்றிருக்குமென எப்படி எதிர்பார்ப்பது?

தந்தை உழைக்கிறான்; ஆனல், தன் மனைவி மக்களைக் காப்பாற்ற வேண்டிய ஊதியம் அவனுக்குக் கிடைத்தால் தானே?

உழைத்து உழைத்து அலுத்துப் போன அவனுக்கு, தனது பதினன்கு வயதுப் பையனை பள்ளிக்கு அனுப்பி படித்துப் பட்டம் பெறச் செய்து, பாங்கான வாழ்வு தரவேண்டுமெனும் ஆசைகூட இருக்கலாம்; ஆனல் அவன் நிலை? அதுதான் பரிதாபத்திற்குரிய தாயிற்றே!

அந்தப் பரிதாபத்திற்குரிய நிலையில் நாட்டு மக்களில் பெரும்பாலானோர் இருப்பதால்தான், விவசாயிகள், நெசவுத் தொழிலாளர்கள், இன்னும் பல துறைகளில் வேலை செய்வோர் எல்லாம் தங்களோடு தமது பிள்ளைகளும் வேலை செய்தால், 'நலம்' என நினைக்கும் மனப்பாங்கைப் பெற்றிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் மேலாக, '6-முதல் 11-வயதுச் சிறுர்கள், தங்கள் தங்கள் குலத் தொழிலைச் செய்ய வேண்டும்,' என்று திட்டம் தீட்டும் கொடுமனம் கொண்ட 'குணளர்'களும், அவர்களும்கூட ஆட்சிபீடமேறும் அவல நிலையும் நாட்டிலிருக்கிறதே!

அப்படி இருக்க, 'பதினன்கு வயதுச் சிறுர்கள் வேலை செய்யக்கூடாது,' எனச் சட்டமியற்றிப் பலன் இல்லை.

சட்டத்திற்குத் தகுந்த சூழ்நிலை நாட்டில் நிலவச் செய்யப்பாடுபட்டாக வேண்டும்.

"சென்னை மாநிலத்தில் உள்ள பள்ளி செல்லும் பருவக் குழந்தைகளில் சுமார் 55 சதவிகிதத்தினர் மட்டுமே தொடக்கக் கல்வி மட்டிலுமாயினும் பயில முற்படுகின்றனர்," என்று கல்வித் துறை முதல்வர் கூறுகிறார். எஞ்சியுள்ள பள்ளிப் பருவத்தினர் எல்லாம் என்ன செய்கின்றனர்?

'அம்மா பசிக்குதே! தாயே பசிக்குதே!' என்ற 'சம்சார' கீதம் இசைப்பவர்களாக, பிச்சைக்காரர்களாக, பலர்; இன்னும்சிலர் கவனிப்பாரற்று, கண்டதை உண்டு காலங் கடத்துபவர்; இன்னும் எத்தனையோ பேர், இந்த 'ரக'த் 'தொழில்' புரிபவர்களாக வதிகின்றனர்!

இத்தனையும் போக, எஞ்சியுள்ள சிலர் மட்டுந்தான், "எங்காவது வேலையில் அமர்வோமா — 'எடுபிடி'யாக, பீடி சுற்றுபவனுக, பெட்டி தூக்குபவனுக—சென்றால், கையில் நாலு காசு கிடைக்காதா," என்ற எண்ணத்துடன் வேலைக்கு அனுப்பப்படுபவர்கள்!

பாலகர்களின் பல நிலைகளில், இறுதி நிலையில் இருப்பவர்கள், வேலை செய்யும் வயது வராதவர்கள்; வருத்தி உழைக்கக் கூடாத வளம் பெருத பிஞ்சு உடலினர்; 'அவர்களிடம் வேலை வாங்குவது கொடுமை,' எனக் கூறப்படுகிறதென்றால்- எதைக் காரணம் காட்டி, 'பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் வேலை செய்யக் கூடாது,' என்கிறார்களோ, அந்த உடல் வளப்பம் பெற அல்ல—'உயிர் வாழ்வதே பெரியபாரம்,' என்று பெற்றோரால் கருதப்படுகிற நிலையில் இருக்கும் பாலகர்கள் படும் பலவகை இன்னல்களை என்னென்று அழைப்பது?

எனவே, இம்மாதிரியான கொடுமைகள் அகல, நாட்டு மக்கள் எல்லோருக்கும் வாழ்வு கிடைக்க வேண்டும்.

பெற்ற குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல், கழுத்தை நெரித்துக் கொல்லும் நிலையில் தந்தைகள் இருக்கக்கூடாது!

வயது வந்த தாய்க்கு வாழ்வு தர இயலாது, தானும் வாழ வழியின்றி, வேலையின்றித் தவித்து, தாயின் கழுத்தை அறுத்து, தானும் தற்கொலை செய்துகொள்ளும் நிலையில், பிள்ளைகள் வைக்கப்படக் கூடாது!

"உழைத்துக் கிடைக்கும் பலன், ஒருவேளை உணவுக்கே போதவில்லை; பையனும் நாலணு சம்பாதித்தால்........?" என்று நினைக்கும் நிலை, மக்களிடையே ஏற்படவிடக் கூடாது!

துவாரகாபுரி பாலன்-வெண்ணெய் உண்ணும் கண்ணன் இருந்தாலல்லவோ, குசேலர்களும், குழந்தைகள் 27 என்றாலும்—அவற்றில் எதுவும் வேலை செய்யாவிட்டாலும், 'குடும்பக் கவலை'யற்றிருக்கலாம்!

இந்த நாட்களில் கண்ணனும் இல்லை; குசேலர் போன்று, 'குடும்பக் கவலை' யற்றிருக்கும் பெற்றோரும் இல்லை!

பொதுவில், நாட்டு மக்களுக்கு நல்ல வாழ்வு தரப்பட்டாலன்றி, பக்குவம் பெறுமுன் பாடுபட வைத்துச் சிறுர்களின் வளர்ச்சியைக் குன்ற வைக்கும் கொடியநிலை மாறாது!

"சிறுவர்கள் என்றால், அதட்டி வேலை வாங்கிவிட்டு, சம்பளம் சற்றுக் குறைத்துக் கொடுக்கலாம்" என்று, அணு, பைசா கணக்கிடும் கருணை மூர்த்திகளும், தங்கள் மனதை மாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

"சிறுவன் தானே! அடித்துச் சொல்லலாம்—இதைச் செய்யடா, அதைப் பாரடா—என்று; என்ன செய்தாலும் ஏழைதானே! யார் கேட்கப் போகின்றனர்," என்று எண்ணும் சர்வாதிகாரப் போக்குக் கொண்ட 'குட்டி எஜமானர்'களும் இருக்கத்தானே செய்கின்றனர்!

சர்க்கார் அறிக்கை கூறுவது போல், அவர்கள், சட்டத்தையும், சர்க்காரையும் ஏமாற்ற பதினன்கு வயதுச் சிறுர்களை வேலையில் அமர்த்திக் கொண்டிருப்பதாகக் குறிப்பேடுகள் கூட வைத்துக் கொள்ளாமலிருந்தாயினும், அந்தக் கொடுமையைத் தொடர்ந்து செய்யத்தான் செய்வர்.

இப்படி நாம் கூறுவதாலேயே, தற்போதுள்ள அந்தச் சட்டம் நடைமுறையில் கூடாதென்பதல்ல, நமது நோக்கம்.

ஆட்சியிலிருப்போர், சட்டத்தை அமுல் செய்வதில் தீவிரம் காட்ட முயற்சிக்கிற அதே வேளையில், குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் கொடிய நிலை உருவாகாத வகையில், சமுதாய அமைப்பையும் மாற்ற முயற்சிக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

## பாக். மந்திரி சபை!

### குலாம் தால்பூர் விலகுகிறார்?

பாகிஸ்தான் மந்திரி சபையிலிருந்து மீர்குலாம் அலிகான் தால்பூர் இராஜினமா செய்துவிட முடிவு செய்துள்ளாராம்.

இவர் கடந்த அக். 24-ந் தேதியன்று முகம்மது அலி, பாக். மந்திரிசபையை புதுப்பித்தபோது மந்திரிசபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்.

சிந்து மாநிலத்தில் நீக்கப்பட்ட முதன் மந்திரியான பீர்ஜாடா அப்துஸ்சத்தார் கோஷ்டியினைச் சேர்ந்தவராம் இவர்.

தனது பிரதிநிதியான மீர்ஜாடா பதவியிலிருந்து நீக்கப்பட்டு குஹ்ரோவை மந்திரிசபை அமைக்க அழைக்கப் பட்டிருப்பதையும், மேற்கு பாகிஸ்தான் ஒரே அங்கமாக இணைக்கப்படுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியையும், தால்பூர் கண்டிக்கிறார் எனத் தெரிகிறது.

## கல்வி - ஒரு கூட்டு முயற்சி

### இடைநிலைக்கல்வி மாணவனை மனிதனுக்க வேண்டும்

கல்வி இலாகாவினர் கருத்து

"கல்வி என்பது, பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி இலாகாவினர் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும்.

"பதினன்கு வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி போதிக்க வேண்டுமென நமது அரசியல் சட்டம் கூறுகிறது.

"அப்படி எல்லோருக்கும் கல்வி அளிப்பதற்கான வழி வகைகளை நாங்கள் தீவிரமாக யோசித்து வருகிறோம்.

"அரசியல் சட்டம் அமுலுக்கு வந்து மூன்று ஆண்டுகளாகிவிட்டன; என்றாலும், 55 சதவிகிதக் குழந்தைகள்தான் பள்ளி செல்கின்றனர்.

"குழந்தைகள்தான் நாட்டின் நம்பிக்கை; அவர்களை நல்ல குடி மக்களாக உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்களாகும்,"

இவ்வாறு, கல்வி இலாகா தலைமை அதிகாரி என். டி. சுந்தர வடிவேலு அவர்கள், வடஆற்காடு ஆசிரியர்கள் சங்கத்தின் 23-வது வருடாந்திர மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தோழர் எஸ். நடராசன் என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இடைநிலைக் கல்வி பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். இடைநிலைக் கல்வி, ஒரு மாணவன் அவன் குடிமகனுகும்போது, தானகவே சம்பாதித்து, அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடியவனுக ஆக்கும் வகையில் இருக்க வேண்டும்," என்றார்.

## ஜெர்மானிய விஞ்ஞானிகள்

### அமெரிக்கக் குடிமக்களாகின்றனர்

நாஜி ஜெர்மனிக்கு 'வி - 2' போன்ற பயங்கரமான ஆயுதங்களைத் தயாரித்துக் கொடுத்த 41 ஜெர்மானிய விஞ்ஞானிகள், அமெரிக்கக் குடிமக்களாகமாறினர் என்று தெரிகிறது.

இதற்காக நடைபெற்ற ஒரு விழாவில், அந்த விஞ்ஞானிகள் எல்லோரும், அமெரிக்காவுடன் ஒன்றி வாழ்வதாக உறுதிமொழி மேற்கொண்டனராம்.

இந்த விஞ்ஞானிகள் இப்போது சந்திர மண்டலம் செல்லும் முயற்சியில் மிகுந்த ஆர்வமுடையவர்களாயிருக்கின்றனராம்.

இந்த விஞ்ஞானிகள் பலரின் மனைவிமார்களும் அமெரிக்கக் குடி உரிமை பெற்றுள்ளனராம்.

## சென்னைக்கு மேலும் 70 புதிய பஸ்கள்

சென்னை சர்க்கார், 1956-ம் ஆண்டுக்குள் மேலும் 70 புதிய பஸ்கள் வாங்கத் திட்டமிட்டுள்ளனராம்.

சென்னை நகரில் அலுவலக நேரங்களில் திறமையாகவும், துரிதமாகவும் பஸ்களை ஓட்ட புதிய முயற்சிகள்மேற்கொள்ளப்படுமாம்.

## புதுவைக்கு நூல்

### ஏற்றுமதி செய்ய அனுமதி

"புதுவைப் பகுதியின் எந்த இடத்திற்கும், சென்னை நூல் வர்த்தக 1953-ம் ஆண்டு சட்டத்தின் கீழ், நூல் வர்த்தக அனுமதி பெற்றிருக்கும் எல்லா வியாபாரிகளும் சென்னை மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல் அனுப்பலாம்," என்று சென்னை சர்க்கார் குறிப்பொன்று கூறுகிறது.

# பதவிக்காக மானத்தை விலை கூறுவதா?

## காங்கிரஸ் மேலிடத்திற்கு பட்டத்தின் பணிவு

காங்கிரசின் கொள்கைகளுக்கு எதிராக இதுவரையிலும் தமது சர்க்கார் நடந்து கொண்டதில்லை யென்றும், இனிமேலும் காங்கிரசுக்குத் தெரியாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய தாம் விரும்பவில்லை யென்றும், மாருக, இனிமேல் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள்பற்றி, காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து கலந்தாலோசித்து முடிவு செய்வதாகவும், திரு—கொச்சி முதல் மந்திரி பட்டம் தாணு, புதுடில்லியில் உறுதிமொழி கூறியிருக்கிருர்.

திரு—கொச்சி மந்திரி சபையை விரிவாக்குவது பற்றி இன்னும் தாம் எவ்வித முடிவுக்கும் வரவில்லை யென்றும், திரு—கொச்சி தமிழ்ப் பிரதேசங்களைவிடவோ, அல்லது மலபார் மாவட்டத்தை திரு—கொச்சியுடன் சேர்த்துக் கொள்ளவோ தாம் விரும்பவில்லை என்றும் கூறியிருக்கிருர்.

பத்திரிகை நிருபர்களிடையே அவர் மேலும் பேசுகையில், திரு—கொச்சியிலுள்ள தற்போதைய நிலைமைக்கு, தென் திருவாங்கூர் திரு—கொச்சியுடன் இணைக்கப்பட்டே இருக்க வேண்டுமென்றும், அவ்வாறு இருந்துவருவதே அங்குள்ள மக்களுக்கு அதிக நன்மை பயப்பதாக இருக்குமென்றும் கூறியிருக்கிருர்.

# பட்டத்தின் அடக்குமுறை

நண்டனைக் கணைகள் பெருகுகின்றன

திரு—கொச்சியில் ஆட்சி புரியும் பி.-சோ. கட்சி சர்க்கார் கையாண்டு வரும் கொடிய அடக்குமுறைகளைக் கண்டிக்கும் முறையில், திருச்செந்தூர் தாலுகா பி.-சோ. கட்சியின் செயலாளரான பி. பிச்சய்யா என்பவர் தமது பதவியை இராஜிஞமாச் செய்ததோடு, கட்சியிலிருந்தும் விலகிக்கொண்டார் என்று தெரிய வருகிறது.

# அல்ஜீரியக் கலகக்காரர்களுக்கு எகிப்தில் தளம்?

## 'நேட்டோ'வில் பிரான்சின் புகார்

அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு, எகிப்திலிருந்து ஆதரவும், அனுதாபமும் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது.

அல்ஜீரியக் கலகக்காரர்களைத் தூண்டிவிடும் அளவிற்கு எகிப்து பகுதிகளிலிருந்து வாஞெலி மூலம் செய்திகள் ஒலி பரப்பப்படுகின்றனவாம்.

கைது செய்யப்பட்ட அல்ஜீரியக் கலகக்காரர்களிடம், எகிப்தில் இருந்து பணியாற்றும் 'சுதந்திர மகரப்' என்னும் குழுவின் அடையாளச் சீட்டுகள் காணப்பட்டனவாம்.

அல்ஜீரியா, அட்லாண்டிக் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள நாடு; எனவே, அட்லாண்டிக் உடன்படிக்கையின் மூலம், தொந்தரவு ஏற்படும் நாடொன்றுக்கு மற்ருெரு அட்லாண்டிக் உடன்படிக்கை நாடு உதவி செய்து, கலகத்தை அதிகரிப்பது தவறு என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பிரான்சின் முன்னுள் பிரதமரான ரெனே மேயர் என்பவர் இதைச் சுட்டிக்காட்டி, 'நேட்டோ' நிலையத்திடம் புகார் செய்து, 'எகிப்து நாடு, அல்ஜீரியக் கலகக்காரர்களின் தளமாக அமையாது தடுக்கவேண்டு மென்று கூறியிருக்கிருர்.

பிரெஞ்சுப் பிரதமர் மென்டே பிரான்ஸ், பாராளுமன்றத்தில் பேசுகையில், தான் வாஷிங்டன் செல்லும்போது இப்பிரச்சினையை பற்றி 'நேட்டோ' தலைமை நிலையத்தில் புகார் செய்வதாக கூறினர்.

'பிரான்ஸ் மாத்திரம் தனது வலிமையினுல் எகிப்து நாட்டைக் கட்டுப்படுத்துவதைவிட 'நேட்டோ' அமைப்பின் மூலம் தகுந்த நடவடிக்கை எடுப்பது சரியானதாகும்,' என்று ரெனே மேயர் கூறியிருக்கிருர்.

# தான் கைதாகாமலிருக்க காங்கிரஸ் உறுப்பினர் சீட்டு கேடயமாகிறது!

தங்களைப் போலீசாரின் கைக்குத் தப்புவித்துக் கொள்ள, கல்குளம், விளவங்கோடு ஆகிய இடங்களிலுள்ள மக்கள் பலர் ஒரு 'நவீன முறை'யைக் கையாண்டு வருகின்றனராம்.

அதாவது, தாங்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்தான் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக, ஒவ்வொருவரும் 4 அணு செலுத்தி காங்கிரஸ் உறுப்பினர் ரசீதை வைத்துக் கொண்டு, போகிற வருகிற இடங்களில் போலீசார் அவர்களை நெருங்குகின்றபோது, அந்த ரசீதுகளைக் காட்டி தப்பித்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது!

# திராவிடத்தின் வளம்

சுப்பிரமணியம் உணர்கிருர்

சென்னை மாகிலத்தில் கிடைக்கும் "பாக்ஸைட்" எனும் அலுமினியத் தாதுப் பொருள்கள் மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை யென்றும், இத்தாதுப் பொருள்களைப் பயன் படுத்தினுல், இங்கு ஒரு அலுமினியத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்த முடியுமென்றும் நிதிமந்திரி திரு. சுப்பிரமணியம் கருத்தறிவிக்கிருர்.

# இணைக்கப்பட்ட புதுவையில்...

புதுவை, நவ. 17—

இணைக்கப்பட்டுள்ள புதுவைப் பகுதியிலிருந்து இந்தியாவிற்குக் கார்கள், தங்கம், வெள்ளிபோன்ற பொருள்கள் அனுப்புவது இப்போதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நவம்பருக்கு முன், முன்னுளைய பிரெஞ்சுப் பகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்ட அப்பொருள்கள், அங்கேயே சுங்கவரி எதுவுமின்றி உபயோகிக்கப்பட தடையேதுமில்லை என்று தெரிகிறது. அங்கு அப்பொருள்களை விற்கவும், வாங்கவும் கூடத் தடை கிடையாது.

சாமான்கள் கள்ளத்தனமாக இந்தியாவுக்குள் கொண்டுவரப்படக் கூடாதெனவும், கொண்டு வருபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் எனவும் தெரிகிறது.

# திரு-கொச்சி ம. சோ. கட்சிக்கும் காங்கிரசிற்கும் உள்ள உறவு?

## ஊடலா? உண்மையான கருத்து வேற்றுமையா?

## சட்டசபை காங்கிரஸ் தலைவரின் மாய்மாலம்!

"ஆட்சியிலிருக்கும் பி.-சோ. கட்சி சர்க்கார், காங்கிரஸ் கட்சிக்கு வேண்டி எதுவும் செய்யத் தேவை இல்லை; மக்களுக்கு ஏதாவது நன்மைகள் செய்வதுடன் எதிர்ப்புகளோ, குறைகளோ இல்லாமல் திறமையுடன் ஆட்சிபுரிந்தால் அதுவே போதும்,"

என்று, திரு-கொச்சி சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்தமேனன், பிராக்காடு எனுமிடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னர்:—

"முன்பு காங்கிரஸ் கட்சியிலிருந்து சிலர் பிரிந்துபோனர்கள். அதற்குமுன் திரு-கொச்சியில் நடைபெற்ற எந்தத் தேர்தலிலும், எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைத்ததில்லை அப்போதைய சட்டசபைக்கூடம், ஒரு 'காட்சிக் கூடம்' போலத் தான் காட்சியளித்தது.

"இந்த மாகிலத்தில், குழப்ப நிலையிலிருந்த முன்னுள் சரித்திரங்களைப் பார்வையிடுகையில், 108 உறுப்பினர்கள் கொண்ட சட்டசபையில், 44 பேர் மட்டுமே கொண்ட காங்கிரஸ் கட்சி அமைச்சரவை அமைத்து, ஆட்சி பீடம் ஏறியது எதற்காக என்ற கேள்வி எழலாம். மக்கள் யாவரும் சுய உரிமையுடன் நடக்க வேண்டுமென்ற ஒரே எண்ணம் தான் அதற்கான காரணமாகும்."

தொடர்ந்து அவர் பேசுகையில், குறிப்பிட்டார்:—

"காங்கிரஸ் கட்சி பலபல இடங்களில் பி.-சோ. கட்சிக்கு ஆதரவு தந்ததை மறந்துவிட்டு, பி.-சோ. கட்சி, ஆட்சிபீடம் ஏறியதும், பட்டம் தாணு, காங்கிரசைத் தாக்கிப் பேசியதோடு மட்டுமல்லாமல், 'காங்கிரஸ் கட்சியிடம், எங்களுக்கு ஓட்டுச் செய்புங்கள் என்று யாராவது கேட்டார்களா?' என்றும் கூறினர். மேலும், பட்டம் தாணு 'காங்கிரசின் ஆதரவு கொண்டில்லாமல் மக்களின் ஆதரவோடு நாங்கள் ஆட்சி செலுத்துகிருேம்' என்றெல்லாம் கூறினர். இது, 'என்னைக் கண்டால் கிண்ணம் திருடியவன் போலத் தோன்றுகிறதா?' என்று கேட்பதற்கு ஒப்பானதேயாகும்," என்ருர்.

# திரு-தமிழகப் போராட்ட வழக்கு

## போலீசாரின் தில்லுமுல்லு!

திரு—தமிழக இணைப்புப் போராட்ட வழக்கிற்காக சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்ல நிர்ப்பந்தப்படுத்தி சாட்சிகளைச் சேகரிக்கப் போலீஸ் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

சென்ற 13-ந் தேதியன்று, நாகர்கோவிலை அடுத்த வில்லுக்கீறி எனும் ஊரிலுள்ள எல். எம். எஸ். ஆரம்பப்பள்ளியின் தலைமையாசிரியை ஒருவரை, போலீஸ் அதிகாரி ஒருவர், 'ஆகஸ்டு 11-ந் தேதி யன்று, தி. த. நா. காங்கிரஸ்காரர்கள் தாங்கள் போராட்டம் நடத்தும்போது, அந்தப் பள்ளியை அடைக்கும்படி தம்மிடம் வற்புறுத்தியதோடு, பாடசாலை நடவடிக்கைகளுக்குப் பல தொந்திரவுகள் அளித்ததாக'வும் சாட்சியம் கூற வேண்டுமென்றுவற்புறுத்தினுராம்.

'அம்மாதிரி செய்கைகள் ஒன்றும் அன்று நடைபெற்றது கிடையாது,' என்று கூறி, அந்த அம்மையார் மறுக்க, போலீஸ் அதிகாரி அவருக்கு 'சம்மன்' வருமென்றும் கோர்ட்டிற்குக் கண்டிப்பாக வர வேண்டுமென்றும் கூறி அவரைப் பயமுறுத்தியிருக்கிருர்.

அதுபோலவே, மாடத்திட்டுவிளை எனும் இடத்திலுள்ள ஆங்கிலப் பள்ளிக்குச் சென்று, அங்குள்ள 'பியூனை' அழைத்து, இவ்வாறு சாட்சியமளிக்க வேண்டுமென வற்புறுத்திச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

# 'ஓடிவாருங்கள்! காங்கிரஸ் கூடாரத்துக்குள் ஒன்றுபடுங்கள்!'

'நேரு தலைமையிலுள்ள காங்கிரஸ் என்றும் காந்திய வழியை விட்டகலாதது'

## பிரகாசத்தின் புதிய பதவி கீதம்!

"பண்டிதர் தலைமையிலுள்ள காங்கிரஸ், என்றும் காந்திய வழியிலிருந்து விலகிச் சென்றது கிடையாது; எனவே, அனைவரும் காங்கிரஸ் கூடாரத்திற்குள் மீண்டும் ஒன்றுபடுங்கள்."

இவ்வாறு, ஐந்தாண்டுக்குப் பிறகு, மீண்டும் காங்கிரசில் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட இருக்கிற ஆந்திர கேசரி பிரகாசம் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

பிரிக்கப்படாத சென்னை மாகிலத்தில் காங்கிரஸ் முதல் அமைச்சராக ஓராண்டுகாலமிருந்து விரட்டப்பட்ட ஆந்திரகேசரி பிரகாசம், கடந்த ஐந்து ஆண்டுகளாகக் காங்கிரசை எதிர்ப்பதில் மும்முரமாக இருந்தார். அக்காலங்களில் அவர் புரிந்த அரசியல் திருவிளையாடல்கள் அனைத்தும், அவருக்கிருந்த பதவி வெறியையே அம்பலப்படுத்துவதாக இருந்தன. அப்பொழுதும் நேரு பண்டிதரிடம்தான் காங்கிரஸ் கடிவாளம் இருந்து வந்தது. முதல் இரண்டாண்டு மறைமுகமாகவும், பின் மூன்ருண்டு நேரடியாகவும் காங்கிரசை இயக்கி வந்திருக்கிருர் நேரு பண்டிதர்.

அந்த ஐந்து ஆண்டுகளிலும் காந்திய வழியிலிருந்து பண்டிதர் விலகிச் செல்லுவதாகக் குறைபட்டு வந்த அதே பிரகாசம் தான், அவர் என்றும் காந்திய பாதையிலிருந்து விலகினதில்லை என்று, இப்பொழுது கண்டுபிடித்துக் கூறுகிருர். ஆந்திர கேசரியின் இந்த இரண்டு கருத்தில் எது உண்மை? அல்லது இரண்டுமே உண்மை துளியும் கலவாத பொய்யா?

அப்பா! ஆந்திர கேசரியின் பதவி வெறி, பாகிஸ்தான் தலைவர்களின் பதவி மோகத்தையும் தோற்கடித்து விடும்போல் இருக்கிறது! அவர் இயற்கை எய்தி, அவர் உடல் இடுகாட்டில் இடம் பிடித்துக் கொண்டாலும், அங்கும், அவருக்கிருந்த பதவி வெறி, அவர் சடலத்தைச் சுற்றி ஆலவட்டம் வீசி, எக்காளமிடும் போலும்!

# 'பட்டத்தின்போக்கு நாட்டுநலனுக்கு துரோகமிழைப்பதாகும்!'

## "அதை எதிர்த்துப் போராடுவது இன்றியமையாதது!"

"திரு-கொச்சி ஆட்சிபீடத்திலுள்ள பி. சோ. கட்சி சர்க்கார், இந்தச் சந்தர்ப்பங்களில் கையாண்டுவரும் கொள்கைகள் யாவும், நாட்டிற்குத் துரோகம் விளைவிப்பனவாகும்; அதை எதிர்த்துப் போராட வேண்டியது மிகவும் அவசியமானதொன்ருகும்."

—இவ்வாறு, சமீபத்தில் சீனு சென்று திரும்பியுள்ள பி. டி. புன்னூஸ் எம்.பி, கூறியிருக்கிருர்.

அவர் மேலும் கூறியதாவது:—

"திரு-கொச்சி சர்க்கார், தொழிலாளரது நலனையும், அவர்களது உரிமைகளையும் அடக்கி ஒடுக்கப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், வேலைநிறுத்தம், மறியல் செய்வோர்களைப் படாதபாடு படுத்துகிறது. வேலை நிறுத்தம் செய்கின்ற உரிமை, தொழிலாளருக்கு உண்டு; அந்த உரிமை அவர்களுக்கிருந்தும், அவர்களை அடக்கி ஒடுக்க, போலீசார் 'கருங்காலி'களைத் தூண்டிவிடுகின்றனர்" என்ருர்.

# தமிழ் இலக்கிய வரலாறு

தொகுக்க முயற்சி

தமிழ் இலக்கியங்களை இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவும், சுமார் 300 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தக வடிவில் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை எழுதவும் அண்ணமலை நகர் தமிழ் மொழி இலக்கிய ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

தமிழ், ஆங்கில மொழிகள் நன்ருகத் தெரிந்த வல்லுனர்களைக் கொண்டு ஷேக்ஸ்பியரின் நாவல்களை சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யவும் அது சிபார்சு செய்திருக்கிறது.

# மின்சாரத் திட்டங்கள்

## நிறைவேற்ற மத்திய அரசாங்கம் கடன் உதவி

வேலையில்லாதிண்டாட்டத்தைப் போக்குவதற்கு உதவும் வகையில், சிறுசிறு மின்சாரத் திட்டங்களையும், கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்வதற்கான திட்டங்களையும் தயாரித்து சிபாரிசுகளுடன் அனுப்புமாறு, எல்லா மாகில அரசாங்கங்களையும் மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அத்தகு சிறிய சிறிய மின்சாரத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் கடன் உதவி செய்யத் தயாராயிருப்பதாகவும் திட்டக் குழு தெரிவித்திருக்கிறது.

இதுவரை பதின்மூன்று மாகிலங்களிலிருந்தும் வந்துள்ள அத்தகைய திட்டங்களை திட்டக் குழு அங்கீகரித்திருப்பதுடன் ரூ. 18·24 கோடி கடனுதவி செய்துள்ளதாம்.

# வருமானம்!

திருமலை—திருப்பதி தேவஸ்தானத்திற்கு இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் மட்டும் ரூ. 1,16,251—6—0 வருமானம் கிடைத்துள்ளதாம்.

திருப்பதியில் உள்ள திருவேங்கடேஸ்வரா கோவிலில் மட்டும் கிடைத்த ரூ. 1,14,553—8—3 சேர்ந்துள்ளது இந்த மொத்த வருமானத்தில் எனத் தெரிகிறது.

# ஐதராபாத்தில் 5,000 பேர் வேலை இழப்பர்

## இரு இலாகாக்கள் ஒழிக்கப்படுவதின் விளைவு

ஐதராபாத் அரசாங்கத்தின் சுங்க இலாகா, விநியோக இலாகா ஆகிய இரண்டும் வருகிற மார்ச் மாத இறுதியுடன் மூடிவிடப்படும்போது அதில் பணியாற்றி வரும் சுமார் 5,000 சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வேலை இழப்பர் எனத் தெரிகிறது.

கட்டுப்பாடுகள் ரத்தான பிறகு பல லட்ச ரூபாய் செலவில் ஏற்றுமதியில் வரி விதிப்புக்காகவும், விநியோகத்திற்காகவும் இருந்த இலாகாக்கள் தேவை இல்லை என சர்க்கார் கருதுகிறது; எனவேதான் அந்த இரு இலாகாக்களும் ஒழிக்கப்படுகின்றன என்று தெரிகிறது.

இதனால் வேலை இழக்கிற 5,000 ஊழியர்களையும் வேறு சர்க்கார் இலாகாக்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்கான முயற்சிகளையும் சர்க்கார் மேற்கொள்ளுமாம்.

சுங்கவரி விதிப்பு இலாகாவிற்கு ஆண்டுதோறும் ரூ. 35 லட்சமும், விநியோக இலாகாவிற்கு ரூ. 20 லட்சமும் செலவாகிறதாம்.

இலாகாக்கள் ஒழிக்கப்படுவதினால் மிச்சமாகும் அந்த ரூ. 55 லட்சமும் நாட்டின் வேறு தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் என்று சர்க்கார் கூறுகிறது.

## தாளியக்கிடங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலையில் நகரில் சம்பவம் எதும் நிகழவில்லை என்று தெரிகிறது.

கட்டாக்கிலிருந்து பெர்ஹாம்பூருக்கு ஆயுதம் தரித்த போலீசார் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

**பெர்ஹாம்பூரில் சிலர் தானியக் கிடங்குகளுக்குத் தீயிட்டதாகவும், கடைத் தெருவில் உள்ள நகைக் கடை ஒன்றில் கைவெடி குண்டு ஒன்று விசப்பட்டதாகவும் தெரிகிறது.**

இந்தியப் பாராளுமன்றத்தில் உள்ள ஆந்திர, ஒரிசா உறுப்பினர்களின் அதுக்குழு ஒன்று உள்நாட்டமைச்சர் கட்ஜுவையும், உதவி அமைச்சர் தாதரையும் கண்டு, ஆந்திரர் - ஒரியர் கலவரம் பற்றி எடுத்துக் கூறினார்கள் என்று தெரிகிறது.

ஒரிசா சர்க்கார் இதுபற்றி விசாரணை செய்யக் குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

★

### முன்னர் வந்த செய்தி

ஆந்திரர்களுக்கும்-ஒரியர்களுக்குமிடையில் இன்னும் பர்லாகிமிடியில் பூசல்கள் தொடர்ந்து நடந்த வண்ணமுள்ளனவென்று ஆந்திர அரசாங்கத்திற்கு தகவல் வந்துள்ளதாம்.

ஆந்திரர்கள் நடத்தும் கடைகள் கொள்ளையடிக்கப்படுவதும், ஏராளமான ஆந்திரர்கள் கைது செய்யப்படுவதுமான நிலை நீடிக்கிறதாம்.

கிடைத்துள்ள தகவல்கள் பரிசீலனை செய்யப்படுவதாயும், தேவைப்பட்டால் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆந்திர அரசாங்கம் முயற்சித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீகாகுளம் மாவட்டக் கலெக்டர், ஒரிய மாநிலத்தில் உள்ள கஞ்சம் மாவட்ட கலெக்டரைச் சந்தித்து; கிடைத்துள்ள தகவல்களின்பேரில் விசாரணை நடத்துமாறு கோரியுள்ளார் எனத் தெரிகிறது.

### மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

ஒரிசாவிலுள்ள ஆந்திரர்கள் அன்மையில் பட்ட கஷ்டங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் ஸ்ரீகாகுளத்தில் உள்ள மாணவர்கள், வகுப்புகளுக்குச் செல்லாது ஊர்வலம் வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனத் தெரிகிறது.

இவர்கள் சர்க்கார் கல்லூரியிலும், நகரசபைப் பள்ளியிலும் கல்வி பயிலுபவர்களாம்.

மாணவர்கள் இங்குள்ள ஒரியர்கள் நடத்தும் சாப்பாட்டு விடுதிகளையும் கடைகளையும் சூறையாட எத்தனித்தனர் என்பது தவறு; அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் அமைதியாகவே நடைபெற்றது. என்றும், எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என்றும், மாவட்ட கலெக்டர் இத்தகவல்களைக் குறித்துப் பத்திரிகை நிருபர்களிடை பேசுகையில் கூறினார்.

## உழவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்குமாறு மாணவர்கள் கேட்டனராம்.

முன் ஏற்பாடு எதும் இன்றி இக்கோரிக்கை இருந்ததால், அமைச்சர், 'தன்னால் வர இயலாது;' என்று கூறிவிட்டாராம்.

இதனால் கோபம் கொண்ட மாணவர்கள், மாநாடு நடைபெறும் போது, 'அமைச்சரே, திரும்பிச் செல்வீர்,' என்று முழக்கமிட்டு, பந்தலில் ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

கல்லூரித் தலைவர், மாணவர்களைச் சமாதானப்படுத்தி வெளியே அழைத்துச் சென்றார்.

மாநாட்டுப் பந்தலைவிட்டு மாணவர்கள் வெளியே செல்லும்போது, தோரணங்களையும், அலங்கரிக்கப்பட்டிருந்த மாநாட்டு முகப்பையும் நாசமாக்கினார்களாம்.

அமைச்சர் பேசுகையில், "இது போன்று, மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாத ஆசிரியர்களால் நடத்தப்படும் கல்லூரி தொடர்ந்து நடைபெறுவது அவசியமா?" என்று கேட்டார்.

மாணவர்களை யாரோ சில காலிகள் தூண்டிவிட்டதாக பத்திரிகை நிருபர்களிடையே கல்லூரித் தலைவர் கூறினர் என்று தெரிகிறது.

## அண்ணாமலை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களை கூட்டத்திற்குத் தலைமை வகிக்க கேட்டுக்கொண்டு, தோழர் கருணாநிதி அவர்களை வரவேற்றுப் பேசினார்.

வழக்கறிஞர் பேசுகையில், நேருவின் எதேச்சாதிகாரப் போக்கினையும், கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டத்தின் அவசியத்தையும், கல்லக்குடி வெற்றியையும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய தோழர் கருணாநிதி; திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் அரசியலில் நேரிடையாக பங்கு கொள்ளாதென்றும், ஆனால்; அரசியலை நன்றாகப் புரிந்து கொள்ளுமென்றும் குறிப்பிட்டார்.

**மேலும் அவர், உலக சமாதானத்தின் தூதுவர் என்று சிந்திக்கப்படும் நேரு, இந்நாட்டிலே ஏற்பட்டிருக்கும் பூசலையும், வறுமையையும் போக்கவில்லை என்றும், ஆடும் பந்தலாக இருக்கும் காங்கிரஸ் கட்சி நேருவுக்குப் பிறகு விழ்ந்துவிடுமென்றும், 'திராவிட நாடு' பிரிவினையின் அவசியத்தைக் குறித்தும் சுமார் 1½ மணி நேரம் வீரவுரையாற்றினர்.**

கூட்டம், செயலாளர் கண்ணப்பா நன்றி கூற இனிது முடிந்தது.

### சப்போவுக்கு புத்தர் சிலை

சப்போவில் உள்ள வாட் மெதற பஹ்ரா சித்தமாஜி என்னும் சயாம் ஆலயத்தில், 72 அடி உயரம் உள்ள புத்தர் சிலை ஒன்று வைக்கப்படும் என்று தெரிகிறது.

## கழகக் கூட்டங்கள்

★

**சிவகெங்கை**

அரண்மனைவாயில் முன்பு

**21—11—54** மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

கோ. மணவாளன்

★

**பெரிய காஞ்சீபுரம்**

தேரடி அருகில்

**21—11—54** மாலை 6 மணிக்கு

தலைவர் :

சி. வி. எம். அண்ணாமலை, எம்.சி.

பேசுவோர் :

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

இராம. அரங்கண்ணல்

★

**சேலம்**

நகர தி. மு. கழக ஆண்டு விழா

விக்டோரியா டாக்கீசில்

**21—11—54** காலை 9 மணிக்கு

தலைவர் : ஜி. பி. சோமசுந்தரம்

பேசுவோர்:

மு. கருணாநிதி

அலிசேக் மன்சூர்

* * *

சேலம் வி. மார்க்கட்டில்

**21—11—54** மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.

பேசுவோர் :

மு. கருணாநிதி

அலிசேக் மன்சூர்

### தி. மு. கழகத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

21—11—54 பகல் 1 மணிக்கு மணலார் எஸ்டேட்டில், தி. மு. கழகத் தொழிலாளர்கள் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். 'தொழிற் சங்கமும்-தி. மு. கழகமும்' என்பது பற்றி தோழர் கே. ஏ. கலையழகன் பேசுவார்.

### முத்தமிழ் விழா

21-11-54 காலை 9½ மணிக்கு திருப்பூர் பல்லடம் ரோடு, சந்தைப்பேட்டை ஆபீஸ் திடலில் தோழர் ஏ. சேனாபதி, எம்.எல்.ஏ., தலைமையில் முத்தமிழ் விழா நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கண்ணதாசன், சி. இலக்குவனார், க. அறிவழகன், நாஞ்சில் பி. இ. கண்ணப்பா, தி. தண்டபாணி, தோழியர் அருண்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் கே. என். பழனிசாமி கவுண்டர், எம்.எல்.சி. பரிசு வழங்குவார். தோழியர் டி. ஆர். கஜலட்சுமி குழுவினரின் இன்னிசையும், இரவு 'ஆண்டவன் எங்கே' என்ற நாடகமும் நடைபெறும்.

### ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் முதல் மாநாடு

21—11—54 அன்று, இராசிபுரம் தாலூகா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் யூனியன் முதல் மாநாடு, இராசிபுரம் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில், தோழர் சி. வெங்கடேசன் தலைமையில் நடைபெறும். தோழர் என். டி. சுந்தரவடிவேலு திறப்புரையாற்றுவார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

### பலகட்ட விற்பனை வரி எதிர்ப்பு மாநாடு

21—11—54 காலை 10-30 மணியளவில், உதகை புளூ மவுண்டன் தியேட்டரில் தோழர் கேசவலால் காளிதாஸ் சேட் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

### சென்னைத் திருவள்ளுவர் கழகம்

20-11-54 மாலை 6-30 மணிக்கு சென்னை, புரசைப் பெரியசாலையிலுள்ள அன்னதான சமாஜ மண்டபத்தில், 'திருக்குறளில்-பொருளும் இன்பமும்' என்பது பற்றி குலசை தோழர் ப. இராமனுதன் பேசுவார்.

## இந்தோனேஷியா மந்திரி சபை

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

இந்தோனேஷ்ய எதிர்க்கட்சியினர்கூட்டாக மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர் என்று தெரிகிறது.

செவ்வாயன்று, எதிர்க் கட்சிகள் கூட்டமொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## காஷ்மீர் பிரச்னை

### பாக். சர்க்கார் முடிவில் மாறுதலில்லை?

காஷ்மீர் பிரச்சினையை மீண்டும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற பாக். அரசாங்கத்தின் முடிவு மாற்றப்படாமலேயே இருக்கிறதென்று முஸ்லிம் லீகின் அதிகார பூர்வமான இதழான 'பாகிஸ்தான் ஸ்டாண்டர்ட்' கூறுகிறது.

இரு நாட்டுத் தகராறுகளையும், தாமும், பண்டித நேருவும் சேர்ந்து பேசித் தீர்க்கவேண்டுமென்ற பாக். கவர்னர்—ஜெனரலின் செய்திக்கு, நேரு சாதகமான பதிலளித்தால் காஷ்மீர் பற்றிய தனது முடிவை, பாக். சர்க்கார் புனராலோசனை செய்யுமெனவும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறதாம்.

## காங்கிரஸ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டதாக, தெசில்தார் சிங் கூறியிருப்பதாகப் போலீசார் அறிவிக்கின்றனர்.

மான்சிங்கின் மிக முக்கியமான கூட்டாளியாக இருந்த தெசில்தார் சிங்கை, உத்திரப் பிரதேச போலீசார் மத்திய பாரத்—உத்திரப் பிரதேச எல்லையில் கடந்த செப்டம்பர் மாதம் கைது செய்தனர் என்று தெரிகிறது.

தெசில்தார்சிங் போலீசாரிடம், "தங்கள் கொள்ளைக் கூட்டத்தில் மிக நம்பகமான வெகு சிலரே உள்ளனர்; திட்டமிட்டுச் செய்யப்படுகிற கொள்ளையின்போது ஆங்காங்கு சில 'கூலி'களை அமர்த்திக் கொள்வோம்; கொள்ளை முடிந்ததும் அந்தக் 'கூலி'களுக்குக் 'கூலி' கொடுத்துவிடுவோம். இந்த முன்னெச்சரிக்கை, எங்கள் கொள்ளைக் கூட்டம் பத்திரமாயிருக்கும் பொருட்டு வெகுவாகத் தேவையானதாகும்," என்று கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### பொதுக் கூட்டம்

அண்மையில் சிதம்பரத்தில் நிகழ்ந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தீர்மானப்படி, செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தைத் தொடர்ந்து நடத்த 21—11—54 காலை 9-30 மணியளவில், வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில், தோழர் மயிலை சிவமுத்து தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

### 'கொள்ளைக்காரன்'-நாடகம்

21—11—54 இரவு 10-30 மணிக்கு சிவகெங்கை கமலாம்பிகை எலெக்ட்ரிக் தியேட்டரில், பாண்டியன் நினைவுப் படிப்பக நிதிக்காக, கோவை நட்பு நாடக சபையாரால் 'கொள்ளைக்காரன்' எனும் நாடகம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

21—11—54 மாலை 6 மணிக்கு சென்னை 35-வது வட்ட தி. மு. கக் கட்டிடத்தில் (63-பி, ஆற்காட்டுச் சாலை, கோடம்பாக்கம்) தோழர் சா. வில்லவன் தலைமையில் 'இன்றைய சமுதாயம்' எனும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

## லாலா லஜபதிராய்

### கட்ஜு புகழ் மாலை

"லாலா லஜபதிராய், சுதந்திரத்திற்காக நடத்தப்பட்ட போரில் அஞ்சாத வீரராயிருந்தார். அந்தப் போரில் பங்கு பெற்ற அவர், தன் உயிரை மட்டுமின்றி, தன் உடமைகளையும் தியாகம் செய்தார்;

"அவர் ஒரு சிறந்த நிர்மாண ஊழியராயிருந்தார்; அவர் உயிருடனிருந்திருந்தால் அவரது ஆலோசனைகளும், சேவையும் நாட்டைத் திருத்தியமைக்க எவ்வளவோ பயன்படும்,"

என்று லாலா லஜபதிராய் நினைவாக நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் உள்நாட்டு மந்திரி கட்ஜு குறிப்பிட்டார்.

## 'மதத் துரோகிகள்!'

முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தின் அங்கத்தினர்கள் எல்லோரையும், எகிப்திய உலேமாக்களின் உயர்சபை 'ஜாதிப் பிரஷ்டம்' செய்ததுடன், அவர்களை, மதத் துரோகிகளாகக் கருதி நடத்தவேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி நகீப்

காவலில் வைக்கப்பட்டிருக்கும் எகிப்திய ஜனாதிபதி நகீபிற்கு பாதி பென்ஷன் தர உத்தரவாகியுள்ளதாம்.

அவர் இங்கிருந்து, 30 மைல் தொலைவில் உள்ள ஒரு இடத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளாராம்.

### மெக்கார்தியின் மீது ஒழுங்கு நடவடிக்கை

#### கைவிடத் தீர்மானம்

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் செனேட்டர் மெக்கார்தியின் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் கண்டனத் தீர்மானத்தைக் கைவிட வேண்டுமென்று குடியரசுக்கட்சியைச் சேர்ந்த செனேட்டர் வில்லியம் ஜென்னர் தீர்மானமொன்று கொண்டுவந்திருக்கிறார்.

இத் தீர்மானத்தின் மூலம், மெக்கார்த்தியின் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் நடவடிக்கை தீர்மானத்தை நிறைவேறவிடாது தடுக்கப்படும் என்று வில்லியம் ஜென்னர் கருதுகிறார்.

### காங்கிரஸ் மாநாட்டிற்கு விசேட பஸ் வசதி

வருகிற ஜனவரி மாதத்தில் ஆவடியில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டிற்கு சென்னையிலிருந்து செல்வோரின் வசதிக்காக, 50 சர்க்கார் பஸ்கள் நன்றுகச் செப்பனிடப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனவாம்!

## தென்னிந்திய மீனவர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அத்துடன், அகில இந்திய உபகாரச் சம்பளக் குழுவையும் சந்தித்து, மீனவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், அச்சமூகப் பிள்ளைகள் கல்வி பெற உபகாரச் சம்பளம் தரப்பட வேண்டுமெனவும் வேண்டிக் கொண்டார்.

கடற்கரை ஓரங்களிலும், உள்நாட்டிலும் வசிக்கும் அவ்வகுப்பினர், 'மீனவர்' என்ற பொதுப் பெயரால் குறிப்பிடப்படவேண்டும் என, அகில இந்திய வானொலி நிலைய அதிகாரிகளிடமும் கோரினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என் அண்ணாதுரை, எம். ஏ.